பிஎஸ்என்எல் - எம்டிஎன்எல் தனியாருக்கா?

2014-15ல் லாபம் ரூ.671 கோடி. 2015-16ல் இது ரூ.2400 கோடியாக அதிகரிக்கும்.

புதுதில்லி, ஜூலை 26-

அதிகமான அளவில் லாபம் ஈட்டித்தரும் பொதுத்துறை தொலைத்தொடர்பு நிறுவனங்களான பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட்(பிஎஸ்என்எல்) மற்றும் மகாநகர் டெலிகாம் நிகாம் லிமிடெட் (எம்டிஎன்எல்) ஆகியவற்றை தனியாரிடம் தாரை வார்க்க மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது, அரசாங்கம் இதனைமறுபரிசீலனை செய்திட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரும், சிஐடியு பொதுச் செயலாளருமான தபன்சென் கூறினார்.மாநிலங்களவையில் திங்கள் அன்றுபொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை எழுப்பும் நேரத்தில் தபன்சென் பேசியதாவது:“மத்திய அரசு லாபம் ஈட்டித்தரும் பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களையும் மற்றும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்குத் தாரை வார்த்திட நிதி ஆயோக் அமைப்பின் மூலம் முயற்சி மேற்கொண்டு வருவதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள், மீண்டும் லாபத்தில் இயங்கத்தொடங்கியுள்ள நிலையில் மத்திய அரசு, தனியார்மய முயற்சியில் இறங்கியுள்ளது. 2014-15ஆம் ஆண்டில் இவற்றின் லாபம் 671 கோடி ரூபாயாகும். 2015-16இல் இது 2400 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி லாபத்தில் இயங்கத் தொடங்கி இருக்கிற சமயத்தில் இவற்றை விற்பனை செய்திட மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.மேலும் கிராமப்புற தொலைபேசி சேவைக்காக, இந்நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய 12,040 கோடி ரூபாயையும் அளிக்க அரசு மறுத்துள்ளது. “இந்தியாவில் உற்பத்தி செய்க” என்றமுழக்கத்தை முழங்கிக் கொண்டே, பொதுத்துறை நிறுவனங்களை விற்பதற்கான நடவடிக்கைகளிலும் அரசு இறங்கிஇருக்கிறது.இந்த முடிவை மத்திய அரசு மறுபரிசீலனைசெய்திட வேண்டும். பிஎஸ்என்எல் தனியாரிடம் தாரை வார்க்கப்படுமானால் அதற்கு எதிராக நாடுமுழுவதும் கடும் கிளர்ச்சிகள் வெடிக்கும்.இவ்வாறு தபன்சென் கூறினார்.